## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு

## Uni5 பக்த விஜயம் - 4.ஸ்ரீநரஹரி தாஸர்

---

காலங்கள் எவ்வளவு மாறியும் மனிதன் இன்னும் மாறவில்லை.குறிப்பாக பாரத தேசத்து இந்து ஜனங்கள் சில விஷயங்களில் மாறியிருக்கிறார்களே தவிர உள்ளார்ந்த மனமாற்றம் இன்னும் ஏற்படவில்லை.வேதங்களின் வழிகாட்டலைத் தவறாகப் புரிந்து கொண்ட ஜனங்கள், அவர்களைத் தவறாக வழிநடத்திய, நடத்தும் பல மதவாதிகளின் கையில் சிக்கிக் கொண்டு தவிக்கும் சனாதன தர்மம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு வருகின்றன.இதன் காரணமாக மதமாற்றம் ஏற்படுகின்றது.அதை இந்துக்கள் எதிர்க்கின்றனர்.ஆனால் தவறு நம்முள் இருக்கின்றது."வேற்றுமை" என்ற கொடிய வ்யாதி இன்னும் நம்முள் குணம் ஆகவில்லை.

இன்னும் சாதிச் சண்டைகளும், தெய்வ வேறுபாடுகளும் வேர் பிடிங்கப்படாமல் உள்ளன.இதனால் இளைய சமுதாயம் நம் தர்மத்தை மதிக்காமல் வளர்கின்றது."நான் மட்டுமே உயர்ந்தவன்" என்ற திமிர்த்தனமான எண்ணத்தால் மேலை நாடுகளில் தெய்வீகத்தைப் பரப்பும் மதங்கள் இளைஞர்களால் மறுத்து ஒதுக்கப்படுகின்றது.அதே தன்மை இந்து மதத்திலும் ஏற்பட்டு வருகின்றது.

பாண்டுரங்கனின் அன்பர்கள் கூட்டம் உண்மையான சனாதன தர்மக் கூட்டம்.அதில் ஹரிஹர வேற்றுமை இல்லை.சிவ-விஷ்ணு வேற்றுமை இல்லை.அபங்கம் பாடிய அன்பர்கள் அனைத்து தெய்வத்தையும் பாடினர், போற்றினர்!

பண்டரிபுரத்தில் மிகச்சிறந்த நகைக்கடை வ்யாபாரி நரஹரி.அவரிடம் மிகத் தரமான நியாயமான விலையில் மிக நுட்பமான நகைகள் கிடைக்கும்.கேட்டதைக் கேட்டபடிச் செய்யும் திறம் அவருக்கு உண்டு.மிகச் சிறந்த சிவ பக்தர்.ஆனால் சிவத்தை உருவத்தில் மட்டும் காணும் அவர் ஆன்மீகப் பரிணாமம் ஆகவில்லை.அனைத்தையும் சிவம் என்று கொண்டாடும் ருத்ரம் ஓதும் அவர், விஷ்ணு தேவதையின் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை.உலகம் புகழும் பாண்டுரங்க க்ஷேத்ரத்தில் அவர் வேற்று மதவாதியாக, சைவ மதப்பித்தில் வாழ்ந்தார்.

பாண்டுரங்கனைக் காணாமல் கண்களைக் காத்துக் கொண்டாராம்.சன்னிதியின் நேர் தெருவில் போக மாட்டாராம்.இப்படிப்பட்ட கூட்டம் இந்து மதத்தில் இன்றும் அதிகம் உள்ளது!

**<u>அரைஞாண் கேட்ட பாண்டுரங்கன்</u>**

பக்தர் ஒருவருக்குக் கல்யாணம் ஆகிப் பலகாலம் ஆகியும் மகப்பேறு இல்லை.தன் பூர்வ ஜென்ம பாவத்தை உணர்ந்த அவர் பல சேவைகளை இறைவனுக்குச் செய்து, வழிபாடு செய்து, தம்பதி சமேதகராய் இறையருள் வேண்டினார்.இறைவனும் அவருக்கு அழகிய குழந்தை ஒன்றை அளித்து, கனவில் தனக்கு தக்ஷிணையாய் பொன் அரைஞாண் செய்து கொடுக்கும் படி பணித்தார்.

எல்லோரையும் போல நரஹரியை அண்டி நகை செய்ய ஏற்பாடு செய்தார்.நரஹரியும் பாண்டுரங்கனுக்கு என்று தெரிந்தும், தொழில் தர்மமாக அதைச் செய்ய ஏற்றுக்கொண்டார்.பாண்டுரங்கனின் இடை[இடுப்பு] அளவைக் கேட்டு அதன் படி செய்தார்.பல முறை செய்தும் நகை இடைக்கு ஏற்றவாறு பொருந்தவில்லை.

நரஹரி ஒரு முறைத் தானே வந்து இடையின் அளவை எடுத்துக் கொண்டால் நல்லது என்று அன்பர் கூற, முதலில் மறுத்த அவர், இருகண்களையும் கட்டுக்கொண்டு அளவு எடுத்தார்.

**<u>உட்கருத்து:</u>**

புறக்கண்கள் விஷ்ணு-சிவ பேதம் உருவத்தால் காட்டும், அகக்கண்களான நம் விழிப்புணர்வு பேதத்தை நீக்கும்.இவர் கண்களைக் கட்டிக் கொண்டார் என்றால் விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார் என்று பொருள்.

ஆனால் உண்மையாக சிவனை பூஜித்த பலனால் அவருக்கு அளவு எடுக்கும் போது அகத்துள் ஞானப்பரிணாம ஏற்பட, பாண்டுரங்கனின் திருமேனியில் சிவபெருமானின் திருமேனி அனுபவம் ஏற்பட வியந்தார்.கண்களை அவித்தார்-மாயையை நீக்கினார், வேற்றுமையை உருவத்தில் காணும் கண்களை அறிந்தார்.மனதில் அவர் அத்வைத்த பாவனையில் உண்மையை உணர்ந்தார்.

**பாண்டுரங்கலிங்கம்**

பாண்டுரங்கனை வெறும் விஷ்ணு என்றோ, ராமன்-க்ருஷ்ணன் என்றோ உருவத்தோற்றாத்தால் அளப்பதே மாயை.அதை மீறி அவர் பரம்பொருள், அனைத்துமான தத்வம் என்று உணர்வதே மெய்ஞானம்.அதனால் தான் ஸ்ரீசங்கரர் பாண்டுரங்க அஷ்டோத்ரத்தில் ”பாண்டுரங்கலிங்கம்” என்றே இறைவனை ஸ்துதி செய்கிறார். ”லிங்கம்” என்ற சொல் ஈசனையும் பரம்பொருளையும் உணர்த்துகின்றது.

நரஹரி பாண்டுரங்கலிங்க அன்பர் ஆகி அபங்கங்கள் அருளினார்.பொன் வேலை செய்த அன்பர் உண்மையில் தன்னை பொன்னான மெய்யுணர்வில் ஐக்யம் செய்து பக்த விஜயத்தில் மிளிர்கிறார்.

ஹரி ஓம்!